RNI-NO: TNTAM/2021/83936

Postel Regd. No: TN/5/SVA/2023-2025







மாலை தந்தி


MALAI THANTHI

தமிழால் வெல்வோம்

DAILY EVENING

மாலை நாளிதழ்

சிவகங்கை | மலர்-4 | இதழ்- 236 | ஆகஸ்டு.28 2025 வியாழக்கிழமை | malaithanthi2020@gmail.com | 4 பக்கங்கள் | விலை ரூ.5



## விநாயகர் சதுர்த்தி: 4 டன் மலர் அலங்காரத்தில் காட்சியளித்த புலியகுளம் முந்தி விநாயகர்

கோவை: ஆக.28-

விநாயகர் சதுர்த்தியையொட்டி 4 டன் மலர் அலங்காரத்தில் பக்தர்களுக்கு புலியகுளம் முந்தி விநாயகர் காட்சியளித்தார். பக்தர்கள் திரளாக சுவாமி தரிசனம் செய்தனர்.

நாடு முழுவதும் விநாயகர் சதுர்த்தி விழா இன்று (ஆக.27) கோலாகலமாக கொண்டாடப்பட்டு வருகிறது. இதையொட்டி கோவையில் உள்ள விநாயகர் கோயில்களில் இன்று சிறப்புப் பூஜைகள் நடைபெற்றன. விநாயகர் சதுர்த்தியையொட்டி பிரசித்தி பெற்ற, ஒரே கல்லால் செய்யப்பட்ட பிரம்மாண்ட விநாயகரான புலியகுளம் ஸ்ரீ முந்தி விநாயகர் கோயிலில் இன்று அதிகாலை சிவாச்சாரியார்கள் வேதமந்திரங்கள் முழங்க யாகவேள்வி தொடங்கி சிறப்பு மகா அபிசேகம் நடைபெற்றது.

இதில் 16 வகையான பல்வேறு வாசனை திரவியங்களல் அபிஷேகம் நடத்தப்பட்டது. அதைத் தொடர்ந்து முந்தி விநாயகருக்கு சுமார் 50 கிலோ எடையில் சந்தன காப்புடன் 4 டன் மலர்களால் ராஜ அலங்காரம் செய்யபட்டது. விநாயகருக்கு பிடித்த பலகாரங்களான கொழுக்கட்டை, அதிரசம், முறுக்கு, லட்டு போன்ற இனிப்பு பலகாரங்கள்லுடன் மகா தீபராதனை நடைபெற்றது. இதில் திரளான பக்தர்கள் தங்கள் வேண்டுதல்களை மனமுருகி வேண்டி வணங்கினர்.

அதேபோல், பிரசித்தி பெற்ற ஈச்சனாரி விநாயகர் திருக்கோயிலில் விநாயகர் சதுர்த்தியை முன்னிட்டு விநாயகருக்கு 16 வகையான அபிஷேகங்கள் நடைபெற்றன. அதனை தொடர்ந்து சிறப்பு அலங்காரத்தில் விநாயகர் பக்தர்களுக்கு காட்சியளித்தார்.

ஆயிரக்கணக்கான பக்தர்கள் நீண்ட வரிசையில் காத்திருந்து சுவாமி தரிசனம் செய்தனர். அதேபோல், கணபதி மாநகரில் உள்ள, வெற்றி விநாயகர் திருக்கோயிலில் இன்று விநாயகர் சதுர்த்தி விழா நடைபெற்றது. அதிகாலை 108 சங்குபூஜை கணபதி ஹோமம், பெருவேள்வி நடைபெற்றது. 108 சங்கு தீர்த்தம் மற்றும் புண்ணிய நதிகளின் தீர்த்த்தில் அபிஷேகம் செய்யப்பட்டு, சிறப்பு அலங்காரம் நடைபெற்றது.

தொடர்ந்து லட்சார்ச்சனை, மகா அன்னதானம் நடைபெற்றது. சரவணம்பட்டியில், சிவகாமியம்மன் உடனுறை சிரவணமாபுரீசுவரர் கோயில் வளாகத்தில் நேற்று முன்தினம் விநாயகர் சதுர்த்தி விழா நடைபெற்றது. சிறப்பு அலங்காரத்தில் சுவாமி பக்தர்களுக்கு காட்சியளித்தார். இதில் ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

## இந்தியா மீது அமெரிக்கா 50% வரி விதிப்பு: எவ்வளவு நெருக்கடி வந்தாலும் கவலையில்லை

### விவசாயிகளை காப்பேன் என பிரதமர் மோடி உறுதி

புதுடெல்லி: ஆக.28-

நாட்டில் உள்ள சிறு நிறுவனங்கள், விவசாயிகளை பாதுகாக்கும் விஷயத்தில் எவ்வளவு நெருக்கடிகள் வந்தாலும் கவலையில்லை'' என்று பிரதமர் நரேந்திர மோடி உறுதியாக தெரிவித்தார். உலக நாடுகளுக்கு அதிகபட்ச வரி விதித்த அமெரிக்க அதிபர் ட்ரம்ப், இந்தியாவுக்கு 25 சதவீத வரியை விதித்தார். உக்ரைன் மீது போர் தொடுத்துள்ள ரஷ்யாவிடம் இருந்து கச்சா எண்ணெய் வாங்குவதால், இந்தியாவுக்கு கூடுதலாக 25% வரியை அறிவித்தார்.

இதற்கான உத்தரவில் நேற்று ட்ரம்ப் கையெழுத்திட்டார். இதையடுத்து அமெரிக்காவுக்கு இந்தியாவில் இருந்து ஏற்றுமதி செய்யப்படும் பொருட்களுக்கு மொத்தமாக 50 சதவீத வரி விதிக்கப்படும். இந்த நடைமுறை இன்று அமலுக்கு வருகிறது. இந்நிலையில், குஜராத் மாநிலம் அகமதாபாத்தில் நேற்று நடைபெற்ற பேரணி மற்றும் பொதுக் கூட்டத்தில் பிரதமர் மோடி பங்கேற்றார்.

அப்போது பிரதமர் மோடி பேசியதாவது: உலகளவில் தற்போது பொருளாதார ரீதியாக அரசியல் செய்வதில் ஒவ்வொருவரும் பரபரப்பாக இருக்கின்றனர். ஆனால்,அகமதாபாத் மண்ணில் இருந்து ஒன்று சொல்கிறேன். மகாத்மா காந்தியின் மண்ணில் இருந்து ஒன்று சொல்கிறேன்.



என்னுடைய சிறு நிறுவனங்களைச் சேர்ந்த சகோதர, சகோதரிகள், சிறிய கடை வைத்துள்ள சகோதர, சகோதரிகள், சிறு விவசாய சகோதர, சகோதரிகள் யாராக இருந்தாலும், அவர்களுக்கு மீண்டும் மீண்டும் உறுதி அளிக்கிறேன். உங்களுடைய நலன், உணர்வுகள்தான் இந்த மோடிக்கு முதன்மையானது.

எனது நாட்டில் சிறு நிறுவனங்கள் வைத்திருப்பவர்கள், விவசாயிகளைப் பாதுகாப்பதில் உறுதியாக இருக்கிறேன். அதற்கு தடையாக எத்தனை நெருக்கடி வந்தாலும், அவர்களின் வாழ்வாதாரத்தை விட்டுத்தர மாட்டேன். அவர்களுக்கு சிறு கஷ்டம் வருவதை என்னுடைய தலைமையிலான அரசு பொறுத்துக் கொள்ளாது. எத்தனை நெருக்கடி வந்தாலும், அவற்றை தாங்கும் வலிமையை அதிகரித்து கொண்டே இருப்போம்.

இன்று ஆத்ம நிர்பார் பாரத் அபியான் திட்டம் குஜராத்தில் இருந்து மிகப்பெரும் சக்தியைப் பெற்றுள்ளது. இருபது ஆண்டு கடின உழைப்பின் பலனாக இந்த மாற்றம் நிகழ்ந்துள்ளது. இவ்வாறு பிரதமர் மோடி உறுதியாக கூறினார். முன்னதாக கடந்த சனிக்கிழமை மத்திய வெளியுறவுத் துறை அமைச்சர் ஜெய்சங்கர் டெல்லியில் பேசும்போது, ''வர்த்தகத்தையே தொழிலாக கொண்டுள்ள அமெரிக்கா, மற்ற நாடுகள் வர்த்தகம் செய்வதை குற்றம் சாட்டுவது முரணாக உள்ளது.

இந்தியாவின் எண்ணெய், சுத்திகரிக்கப்பட்ட பொருட்கள் வேண்டாம் என்றால், அவற்றை வாங்க வேண்டாம். இந்திய பொருட்களை வாங்க சொல்லி உங்களை யாரும் கட்டாயப்படுத்தவில்லை. ஆனால், ஐரோப்பிய நாடுகள் வாங்குகின்றன. அமெரிக்கா வாங்குகிறது. எனவே, உங்களுக்கு பிரச்சினை என்றால், வாங்குவதை நிறுத்திக் கொள்ளுங்கள்'' என்று திட்டவட்டமாக கூறியது குறிப்பிடத்தக்கது.

## இஸ்ரேலின் அயர்ன் டோம் போல இந்திய வான்வெளியை சுதர்சன சக்கரம் பாதுகாக்கும்: முப்படை தலைமை தளபதி தகவல்

இந்தூர், ஆக.28-

இஸ்ரேலின் அயர்ன் டோம் போல், இந்தியாவின் சுதர்சன சக்கரம் வான் பாதுகாப்பு கவசம் உருவாக்கப்படும் என முப்படை தலைமை தளபதி ஜெனரல் அனில் சவுகான் தெரிவித்துள்ளார்.

இந்தியா மீது எதிர்காலத்தில் போர் மூண்டால், குஜராத்தின் ஜாம்நகர் எல்லைப் பகுதியில் உள்ள ரிலையன்ஸ் நிறுவனத்தின் எண்ணெய் சுத்திகரிப்பு நிலையம் மீது தாக்குதல் நடத்துவோம் என பாகிஸ்தான் ராணுவ தளபதி அசிம் முனிர் சமீபத்தில் தெரிவித்தார்.

இதையடுத்து, டெல்லியில் சுதந்திர தின உரையாற்றிய பிரதமர் மோடி, நாட்டில் உள்ள ராணுவத் தளங்கள் மற்றும் முக்கிய இடங்களை, எதிரி நாடுகளின் அச்சுறுத்தலில் இருந்து பாதுகாக்க உள்நாட்டு தொழில்நுட்பத்தில் வான் பாதுகாப்பு கவசம் உருவாக்கும் திட்டத்தை அறிவித்தார். இதற்கு சுதர்சன சக்கரம் என பெயரிடப்படவுள்ளது.

இத்திட்டம் குறித்து இந்தூரில் உள்ள ராணுவ போர் கல்லூரியில் நடைபெற்ற கருத்தரங்கில் முப்படை



தளபதி ஜெனரல் அனில் சவுகான் பேசியதாவது: சுதர்சன சக்கரம் வான் பாதுகாப்பு அமைப்பில் முப்படைகளைச் சேர்ந்த ஏவுகணைகள் மற்றும் கண்காணிப்பு கருவிகள் ஒன்றாக இணைக்கப்பட்டு வலுவான பாதுகாப்பு கவசம் உருவாக்கப்படும். இதை உருவாக்க ஒட்டுமொத்த நாட்டின் அணுகுமுறையும் தேவை. இது இஸ்ரேலின் அயர்ன் டோம் போல, அனைத்து கால நிலைகளிலும், நாட்டை ஏவுகணை தாக்குதலில் இருந்து பாதுகாப்பதாக இருக்கும்.

இதற்காக தரைவழி, வான் வழி, விண்வெளி கடல் வழி, கடலுக்கு அடியில் உள்ள சென்சார்களை ஒருங்கிணைத்து உளவுத் தகவல், கண்காணிப்பை ராணுவம் மேற்கொள்ள வேண்டியது அவசியம். சுதர்சன சக்கரம் வான்பாதுகாப்பு திட்டத்துக்கு முப்படைகளில் உள்ள பல கருவிகளை ஒருங்கிணைக்க மிகப் பெரிய முயற்சிகள் தேவை.

இத்திட்டத்துக்கு செயற்கை நுண்ணறிவு, மேம்பட்ட கணினி செயல்பாடு, தரவு மற்றும் தரவு பகுப்பாய்வு, குவாண்டம் தொழில்நுட்பம் போன்ற அம்சங்களை பயன்படுத்த வேண்டும். சுதர்சன சக்கரம் வான் பாதுகாப்பு திட்டம் 2035ம் ஆண்டுக்குள் அமல்படுத்தப்படும். இவ்வாறு அனில் சவுகான் பேசினார்.

## சொத்து வரியை மறு ஆய்வு செய்ய 100 குழுக்கள்: மதுரை மாநகராட்சி நீதிமன்றத்தில் தகவல்

மதுரை, ஆக.28-

மதுரை மாநகராட்சியில் 3 லட்சத்துக்கும் அதிகமான கட்டிடங்களின் சொத்து வரியை மறு ஆய்வு செய்ய வார்டுக்கு ஒரு குழு வீதம் நூறு குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளது என உயர் நீதிமன்றத்தில் மாநகராட்சி சார்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மதுரை மாநகராட்சி அதிமுக கவுன்சிலர் ரவி, மதுரை மாநகராட்சி சொத்து வரி விதிப்பு முறைகேடு தொடர்பாக சிபிஐ விசாரணைக்கு உத்தரவிடக்கோரி உயர் நீதிமன்ற மதுரை அமர்வில் மனு தாக்கல் செய்தார். இந்த மனுவை விசாரித்த உயர் நீதிமன்றம், சொத்து வரி விதிப்பு முறைகேடு வழக்கின் விசாரணையை தென் மண்டல ஐஜி பிரேம் ஆனந்த் சின்ஹா தலைமையில் சிறப்பு படைக்கு மாற்றி உத்தரவிட்டது.

பின்னர், மதுரை மாநகராட்சியில் அனைத்து கட்டிடங்களின் சொத்து வரியை மாநகராட்சி ஊழியர்கள், வருவாய்த் துறையினர் அடங்கிய குழுவை கொண்டு மறு ஆய்வுக்கு உட்படுத்துவது தொடர்பான செயல் திட்டத்தை தாக்கல் செய்ய மதுரை மாவட்ட ஆட்சியர், மாநகராட்சி ஆணையர் ஆகியோருக்கு நீதிபதிகள் உத்தரவிட்டனர்.

இந்த வழக்கு நீதிபதிகள் எஸ்.எம்.சுப்பிரமணியம், ஜி. அருள்முருகன் அமர்வில் விசாரணைக்கு வந்தது. அப்போது மதுரை மாநகராட்சி ஆணையர் சித்ரா விஜயன் சார்பில் செயல் திட்டம் தாக்கல் செய்யப்பட்டது.






அதில் கூறியிருப்பதாவது: தமிழ்நாடு முழுவதும் அரசின் உத்தரவின் பேரில் 2022ம் ஆண்டு ஏப்ரல் 1ம் தேதி முதல் சொத்து வரி மாற்றியமைக்கும் பணி நடைபெற்று வருகிறது. மதுரை மாநகராட்சியில் 2022ம் ஆண்டு ஏப்ரல் 1ம் தேதி முதல் நூறு வார்டுகளிலும் 21,025 காலியிடம், 13,384 குடியிருப்பு கட்டிடங்கள், 3,503 வணிக கட்டிடங்கள் மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. இதனால் மாநகராட்சியின் வரி வருவாய் ரூ.19.30 கோடி அதிகரித்துள்ளது.

இந்த வழக்கிற்கு பிறகு ஜூலை மாதம் மாநகராட்சியில் வணிக கட்டிடங்களை ஆய்வு செய்த போது 69 கட்டிடங்களுக்கு குடியிருப்பு மற்றும் தொழிற்சாலைக்கான வரி நிர்ணயம் செய்யப்பட்டது கண்டுபிடிக்கப்பட்டது.

இந்த கட்டிடங்களுக்கு கூடுதலாக ரூ.76.15 லட்சம் வரி விதிப்பு செய்யப்பட்டுள்ளது. இதனால் மாநகராட்சி வரி வருவாய் 2022ம் ஆண்டு முதல் ரூ.5.55 கோடி அதிகரித்துள்ளது. மதுரை கே.கே.நகரில் 190 குடியிருப்பு கட்டிடங்கள் வணிக கட்டிடங்களாக பயன்படுத்தி வந்தது கண்டுபிடிக்கப்பட்டு, அந்த கட்டிடங்களின் வரி ரூ.3.36 கோடி அதிகரிக்கப்பட்டுள்ளது.

தற்போது உயர் நீதிமன்ற உத்தரவுபடி வார்டுக்கு ஒரு குழு வீதம் தலா வரி வசூலாளர், குரூப் 3 அலுவலர், தொழில்நுட்ப அலுவலர், சுகாதார மேற்பார்வையாளர் அடங்கிய நூறு குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளது. இந்தக் குழு முதல் கட்டத்தில் 40,261 வணிக கட்டிடங்கள், 2,315 தொழிற்சாலை கட்டிடங்கள், 317 தனியார் கல்வி கட்டிடங்கள், 23,101 குடியிருப்பு கட்டிடங்கள் என 65,994 கட்டிடங்களை ஆய்வுக்கு உட்படுத்தும். இந்த கட்டிடங்களை மறு அளவீடு செய்து வரி விதிப்பை சரி செய்ய குறைந்தபட்சம் 6 மாதம் அவகாசம் தேவை.

இரண்டாம் கட்டமாக நூறு ரூபாய்க்கு கீழ் வரி விதிக்கப்பட்டுள்ள 37,332 கட்டிடங்கள், ரூ.200க்கு கீழ் உள்ள 29,401 கட்டிடங்கள், ரூ.500க்கு கீழ் 67,688 கட்டிடங்கள், ரூபாய் ஆயிரத்துக்கும் கீழ் 61,661 கட்டிடங்கள் என மொத்தமாக 1,96,082 கட்டிடங்கள் உள்ளன. இந்த கட்டிடங்களின் வரி விதிப்பு மறு ஆய்வு பணி முடிய நான்கு மாதம் தேவை. வரி விதிப்பு மறு ஆய்வு பணியை சிறப்பாக மேற்கொள்ள மாநகராட்சி அதிகாரிகள், உதவி வருவாய் அலுவல்கள், நிர்வாக பிரிவு அலுவலர்கள், கண்காணிப்பாளர்கள் மற்றும் ஊழியர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

உயர் நீதிமன்ற உத்தரவுக்கு பிறகு ஒருங்கிணைந்த நடவடிக்கை தொடர்பாக மாவட்ட ஆட்சியருடன் ஆலோசனை நடத்தப்பட்டது. இதில் மாநகராட்சி மண்டல அளவில் உதவி ஆணையர் மேற்பார்வையில் வட்டாட்சியர் அந்தஸ்திலான உதவி வருவாய் அலுவலர், இளநிலை பொறியாளர் அடங்கிய துணைக்குழு அமைக்க முடிவானது. ஏற்கெனவே இந்த விவகாரம் தொடர்பாக 11 பேர் கொண்ட குழு அமைக்கப் பட்டுள்ளது. இக்குழு துணைக்குழுவை கண்காணிக்கும். 11 பேர் குழுவும், துணைக்குழுவும் துணை ஆணையர் (வருவாய்) மேற்பார்வையில் செயல்பட்டு மாநகராட்சி ஆணையரிடம் அறிக்கை தாக்கல் செய்யும்.

இந்த ஆய்வின் போது கட்டிடங்களின் குடிநீர் இணைப்பு, மின் இணைப்பு தொடர்பான தரவுகளும் சேகரிக்கப் படும். இதற்காக தனி செயலி உருவாக்கப்பட்டு அதில் அனைத்து விபரங்களும் பதிவேற்றம் செய்யப்படும். இப்பணி முடிந்தும் சட்டப்படியான நடவடிக்கை தொடரும். 3 லட்சத்துக்கும் அதிகமான கட்டிடங்களை மறு ஆய்வு செய்ய வேண்டியதுள்ளதால் போதிய கால அவகாசம் வழங்க வேண்டும்'' என்று அறிக்கையில் கூறப்பட்டிருந்தது.

இதையடுத்து, நீதிபதிகள், மதுரை மாநகராட்சியில் சொத்து வரி விதிப்பு முறைகேட்டை தொடர்ந்து வரி விதிப்பை மறு ஆய்வு செய்ய மதுரை மாநகராட்சியால் மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் நீதிமன்றத்துக்கு திருப்தி அளிக்கிறது. இந்த நடவடிக்கையை நீதிமன்றம் பாராட்டுகிறது. இந்த நடைமுறையை தமிழகத்தில் உள்ள அனைத்து மாநகராட்சி, நகராட்சி, பேரூராட்சிகளிலும் பின்பற்றி சரியான சொத்து வரி விதிப்பை உறுதி செய்ய வேண்டும்.

இது தொடர்பாக தமிழக தலைமைச் செயலர் சுற்றறிக்கை அனுப்ப வேண்டும். இந்த முறைகேடு வழக்கை காவல் துறை சிறப்புப் படை முறையாக தொடர்ந்து விசாரிக்க வேண்டும். விசாரணையை நீதிமன்றம் தொடர்ந்து கண்காணிக்கும். ஆய்வு நடவடிக்கை மற்றும் முன்னேற்றம் குறித்து மதுரை மாநகராட்சி தரப்பில் அறிக்கை அக். 27ல் தாக்கல் செய்ய வேண்டும்'' என்று நீதிபதிகள் தங்களது உத்தரவில் கூறியுள்ளனர்.





## மாவட்ட ஆட்சியரிடம் காளையார்கோவில் ஆதிதிராவிட மக்கள் மயானப்பாதை கோரிக்கை மனு

காளையார் கோவில், ஆக.28- சிவகங்கை மாவட்டம் காளையார்கோவில் வட்டம் சேதாம்பல் ஊராட்சி சிறுகாணப்பேரி குருப் கழுகாடி கிராமத்தைச்சேர்ந்த சுமார் ஐம்பதிற்கும் மேற்பட்ட ஆதிதிராவிட தாழ்த்தப்பட்ட பறையர் இனமக்கள் தங்கள் நீண்ட நெடுங்காலமாக அப்பகுதியில் வசித்து வருவதாகவும், ஏற்கனவே மயானத்திற்கென பயன்படுத்தி வந்த பாதையை வேறு சமுதாய மக்கள் ஆக்கிரமிப்பு செய்துள்ளதாகவும், தங்களது மயானப் பாதையை மீட்டுத்தருமாறும் மனுவளித்தனர்.

காளையார்கோவில் விசிக ஒன்றிய செயலாளர் காளிதாஸ் தலைமையில் மாவட்ட ஆட்சியரிடம் மனுவளித்தனர்.

மேலும் இதுகுறித்து பேசிய விசிக ஒன்றிய செயலாளர் காளிதாஸ் கூறும்போது நீண்ட நெடுங்காலமாக பயன்படுத்தி வந்த மயானப் பாதையை வேற்று சாதியினர் ஆக்கிரமிப்பு செய்து பட்டா வாங்க முயற்சித்து வருகின்றனர். இதை தடுத்து தாழ்த்தப்பட்ட இன மக்களின் கோரிக்கையை நிறைவேற்றித்தரும்படி கேட்டுள்ளோம், உரிய நடவடிக்கை எடுக்காத பட்சத்தில் எங்களது மாநில மற்றும் மாவட்டத் தலைமையுடன் கலந்தாலோசித்து போராட்ட நடவடிக்கைகளில் ஈடுபடுவோம் எனவும் தெரிவித்தார்...



## போடியில் இந்து முன்னணி சார்பில் 40 ம் ஆண்டு விநாயகர் சதுர்த்தி விழாசிறப்பாக கொண்டாடப்பட்டது

தேனி, ஆக.28- தேனி மாவட்டம் போடியில் இந்து முன்னணி சார்பில் 40 ம் ஆண்டு விநாயகர் சதுர்த்தி விழா பேருந்து நிலையம் தேவர் சிலை அருகே வைக்கப்பட்டுள்ள விநாயகர் சிலைக்கு படையல் படைத்து பழங்கள், பூஜைகள் செய்து வழிபட்டனர் மற்றும் சிறபாக அன்னதான வழங்கப்பட்டது பக்தர்களுக்கு இவ்விழாவினை சிறப்பாக .கணேஷ் குமார் மாவட்ட செயலாளர் (தெற்கு) தலைமையிலும். கண்ணன் பொதுச் செயலாளர் - சிலை கமிட்டி பொறுப்பாளர் மற்றும் பிஜேபி பொறுப்பாளர்களும் தொண்டர்களும் கலந்து கொண்டனர்.



திருக்குறளை அங்கீகரிக்க வேண்டும் திருக்குறளை உலக நூலாக அங்கீகரிக்க வேண்டுமென

## மொரிசியஸ் தமிழர் டாக்டர் ஆறுமுகம் பரசுராமன் ஆசியவியல் நிறுவன இயக்குனருமான பேராசிரியர் ஜான் சாமுவேல் தெரிவித்துள்ளனர்

மீனம்பாக்கம், ஆக.28- சென்னை மீனம்பாக்கத்தில் உள்ள நட்சத்திர விடுதியில் இந்திய வம்சா வழியும் முன்னாள் யுனெஸ்கோ இயக்குனரும் மொரிசியஸ் நாட்டின் முன்னாள் கல்வி அமைச்சருமான முனைவர் ஆறுமுகம் பரசுராமன் அவர்களின் தலைமையில் தமிழ் பணிகள் குறித்த கலந்துரையாடல் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்திற்கு சிறப்பு அழைப்பாளராக ஆசியவியல் நிறுவனரும் இயக்குனருமான பேராசிரியர் ஜான் சாமுவேல் பங்கேற்றார். அயல்நாட்டு வாழ் தமிழர் நலன் குறித்தும் உலகத் தமிழ் மாநாடு குறித்தும் திருக்குறள் தொடர்பான மிகப்பெரிய மாநாடு நடத்துவதற்கான பணிகள் குறித்தும் ஆலோசனை நடைபெற்றது அதனைத் தொடர்ந்து செய்தியாளரை சந்தித்த பேராசிரியர் ஜான் சாமுவேல் அவர்கள் கூறியது மொரிசியஸ் வாழ் தமிழரான டாக்டர் பரசுராமன் திருக்குறளை உலக நூலாக யுனெஸ்கோ நிறுவனம் அறிவிப்பதற்குரிய ஏற்பாடுகளை இணைந்து மேற்கொண்டு வருகிறோம் என்று தெரிவித்தார். திருக்குறள் தொடர்பான மிகப்பெரிய மாநாடுகளை தென்குமரியிலும் இங்கிலாந்து நாட்டு லிவர் பூலிலும் ஆஸ்திரேலியாவின் சிட்னியிலும் அமெரிக்காவில் சிகாகோ நகரிலும் மிகச் சிறப்பாக நடத்தியவர்கள் கனடா நாட்டில் வருகின்ற செப்டம்பர் மாதம் மற்றும் ஜனவரி மாதமும் வள்ளுவர் தினத்தன்று பிரான்ஸ் நாட்டில் யுனெஸ்கோவின் துணையோடு நடத்த இருக்கிறார்கள் இவ்வாண்டு உலகத் தமிழ் மாநாட்டினை மொரிசியஸ் நாட்டில் வருகின்ற டிசம்பர் மாதம் 6 7 8 ஆகிய நாட்களில் இவ்விருவரும் இணைந்து நடத்த இருக்கின்றனர் டாக்டர் ஆறுமுகம் பரசுராமன் தலைமையில் ஏற்கனவே ஏழாவது உலகத் தமிழ் மாநாடு மொரிசியஸ் நாட்டில் நடத்தப்பட்டது அவ்வாறே பதினொன்றாம் உலகத் தமிழ் மாநாடு சென்னையில் பேராசிரியர் ஜான் சாமுவேல் அவர்களால் ஆசியவியல் நிர்வாகத்தின் மிகச் சிறப்பாக நடத்தப்பட்டது எதிர்காலத்தில் இந்திய நாட்டில் தங்கி இருந்து உலகளாவிய தமிழ் பணிகளை மேற்கொள்ளப் போவதாக டாக்டர் பரசுராமன் அறிவித்தார் டாக்டர் பரசுராமன் . தமிழக அரசின் அயல்நாட்டு வாழ் தமிழர் அமைப்பின் ஆட்சி குழு உறுப்பினராக உள்ளது குறிப்பிடத்தக்கது மேலும் இக்கூட்டத்தில் மொரிஷியஸ் நாட்டின் தமிழ் அறிஞர்கள் மற்றும் தமிழ் ஆன்றோர்கள் சான்றோர்கள் இவ் நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர்

## எஸ் ஆர் எம் அறிவியல் மற்றும் தொழில்நுட்ப கழகம் நிறுவனர் பிறந்தநாள் கோப்பை 2025. தேசிய யோகா போட்டி மற்றும் நோவா உலக சாதனை நிகழ்வு

செங்கல்பட்டு, ஆக.28- செங்கல்பட்டு மாவட்டம் பொத்தேரி எஸ்ஆர்எம் அறிவியல் மற்றும் தொழில்நுட்பக் கழகத்தின் (SRMIST) நிறுவன அதிபர் அவர்களின் பிறந்தநாள் விழாவை முன்னிட்டு, யோகா துறை மற்றும் விளையாட்டு இயக்குநரகம், தமிழ்நாடு யோகா கமிட்டியுடன் இணைந்து, தேசிய யோகா போட்டி செங்கல்பட்டு, கட்டாங்குளத்தூர் வளாகத்தில் உள்ள பத்ம விபூஷண் மேஜர் தியான்சந்த் உடற்கல்வி அரங்கில் வெகுவிமரிசையாக நடைபெற்றது.




இரண்டு நாட்கள் தொடர்ந்து நடந்த இந்த வரலாற்று சிறப்புமிக்க நிகழ்வில், 240 மாணவர்கள் தொடர்ந்து 25 மணி நேரம் கண்ணை கட்டியபடி சூரிய நமஸ்காரம் (அதிகாலை 4:30 மணி - மாலை 6:00 மணி) மற்றும் சந்திர நமஸ்காரம் (மாலை 6:00 மணி - மறுநாள் காலை 5:30 மணி) ஆகியவற்றை நிகழ்த்தினர். 30 அணிகளாக மாறிமாறி கலந்து கொண்ட ஒவ்வொரு 8 பேர் கொண்ட குழுவும் 108 முறை செய்தது. இதன் மூலம் மொத்தம் 3,240 முறை நமஸ்காரம் நிகழ்த்தப்பட்டது அபூர்வமான சாதனை நிகழ்த்தப்பட்டது.

"The Journey Through the Eight Limbs of Yoga" என்ற கருப்பொருளில் நடைபெற்ற இந்த நிகழ்ச்சி, போதை பழக்க வழக்கங்கள் கூடாது எனும் விழிப்புணர்வு செய்தியையும் வலியுறுத்தியது. இந்த அசாதாரண சாதனை நோவா உலகச் சாதனையாக அங்கீகரிக்கப்பட்டு, Nova Book of Records இல் பதிவு எண்: NWR-2025-1208 | ஆகஸ்ட் 23-24, 2025 என பதிவு செய்யப்பட்டது.

இதைத் தொடர்ந்து, எஸ் ஆர் எம் நிறுவன அதிபரின் பிறந்தநாள் கோப்பை 2025. தேசிய அளவிலான யோகாசனப் போட்டி தொடங்கியது. இதில் 100க்கும் மேற்பட்ட பள்ளி, கல்லூரி மற்றும் யோகா பயிற்சி மையத்திலிருந்து 1000 மேற்பட்ட மாணவ மாணவிகள், மூன்று வயதிலிருந்து 80 வயது வரை போட்டியாளர்கள் கலந்து கொண்டு வெற்றி கோப்பையை உற்சாகத்துடன் எடுத்துச் சென்றனர்.

நிகழ்ச்சியை டாக்டர் ஆர். மோகன கிருஷ்ணன் (இயக்குநர் - விளையாட்டு இயக்குநரகம், எஸ்ஆர்எம்) மற்றும் டாக்டர் செந்தில் (துறை தலைவர் - யோகா துறை, எஸ்ஆர்எம்) ஆகியோர் துவக்கி வைத்தனர். நிகழ்ச்சியை திரு.ராஜ்குமார் நடராஜன் (தமிழ்நாடு யோகா கமிட்டி) முன்னிலை வகித்தார்.

இந்நிகழ்ச்சியை வெற்றிகரமாக நடத்த திரு. திலீபன் இளங்கோவன் (கூட்டு செயலாளர்), மாவட்டச் செயலாளர்கள் பாசுபதி, பிரபாகரன் இளங்கோவன், கண்ணன், ஏசாகிராஜ், சக்தி, திவ்யா மதுரம், தீபா, ரோஸ்லின் கலைமதி ஆகியோர் பங்களித்தனர். நிகழ்ச்சி தொகுப்பை ஆர்த்தி மேற்கொண்டார்.

தொழில்நுட்ப அணியாக சுகந்தன், ஹேமா மாலினி, நவீன் ஆகியோர் பணியாற்றினர்.

வருங்காலத்தில் ஒலிம்பிக் யோசனை போட்டியில் இந்திய மாணவர்கள் வெற்றி பெற வேண்டும் என நோக்கத்தில் கடினமான பல ஆசனங்களை முன் நிறுத்தி இந்த யோகா போட்டியானது நடை பெற்றது. இதுவரை இந்தியாவில் யாரும் நடத்திடாத புதுமையான வகையில், மூன்று தனி பிரிவுகளுக்கு கீழ் அவர்களுடைய திறமைகளின் அடிப்படையில் போட்டிகளை அமைத்து, வெற்றியாளர்களுக்கு சான்றிதழ் மற்றும் கோப்பையும் கலந்து கொண்ட அனைவருக்கும் சான்றிதழ் மற்றும் பதக்கம் வழங்கப்பட்டது.

1000 மேற்பட்ட போட்டியாளர்கள் பங்கு பெற்ற இப் போட்டியில் எஸ் ஆர் எம் அறிவியல் மற்றும் தொழில்நுட்ப கழகம் நிறுவனர் பிறந்தநாள் கோப்பை 2025ன். வெற்றியாளர்களாக ஆண்கள் பிரிவில்: மௌலிஸ் முத்தாயம்மாள் பொறியியல் கல்லூரி, ராசிபுரம். இரண்டாம் இடம்: வி. பாலசுப்பிரமணியன் எஸ் ஆர் எம் அறிவியல் மற்றும் தொழில்நுட்ப கழகம். Maulis பெண்கள் பிரிவில்: தேவநந்தனா SNS யோகா மையம், காஞ்சிபுரம். இரண்டாம் இடம்: பூமிகா SNS யோகா மையம், காஞ்சிபுரம். சக போட்டியாளர்களின் முன்னிலையில் ஒட்டுமொத்த நடுவர்களின் தேர்வாக இவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு வெற்றி கோப்பையையும் பரிசுகளையும் அளித்து பாராட்டினர்

இந்த விழா, எஸ் ஆர் எம் அறிவியல் மற்றும் தொழில்நுட்ப கழகம் நிறுவன அதிபர் பார்வைக்கு ஏற்ப யோகாவின் மகத்துவத்தையும் ஒழுக்கெநறியையும் சிறப்பாக எடுத்துக்காட்டியது.



## அனகாபுத்தூரில் கேப்டன் விஜயகாந்த் பிறந்த நாளை முன்னிட்டு சிறப்பு பூஜை மற்றும் அன்னதானம் வழங்கப்பட்டது

அனகாபுத்தூர், ஆக.28- செங்கல்பட்டு மாவட்டம் அனகாபுத்தூர் பகுதி தேமுதிக செயலாளர் அனகை மகாதேவன் தலைமையில் நடைபெற்ற நிகழ்ச்சியில் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு. செங்கல்பட்டு தொகுதி முன்னாள் சட்டமன்ற உறுப்பினரும், செங்கல்பட்டு மாவட்ட தேமுதிக செயலாளர் அனகை. முருகேசன் கலந்து கொண்டு ஆலவட்டம்மன் ஆலயத்தில் நடைபெற்ற சிறப்பு பூஜையில் கலந்து கொண்டனர்.

அதனைத் தொடர்ந்து அனகாபுத்தூர் நூலகம் அருகே தேமுதிக நிறுவன தலைவர் கேப்டன் விஜயகாந்த் அவர்களின் திருவுருவப்படத்திற்கு மாலை அணிவித்து, மலர் தூவி புகழஞ்சலி செலுத்தி பொதுமக்களுக்கு அன்னதானம் வழங்கி கேப்டன் பிறந்தநாள் விழா சிறப்பாக கொண்டாடப்பட்டது.

இதனைத் தொடர்ந்து. அனகாபுத்தூர் 4வது வார்டு காமராஜபுரம் பகுதியில் அனகாபுத்தூர் பகுதி அவை தலைவர் மணி ஏற்பாட்டில் கேப்டன் பிறந்தநாள் விழா கொண்டாடப்பட்டது.

இதில் சிறப்பு அழைப்பாளராக அனகாபுத்தூர் பகுதி கழக தேமுதிக செயலாளர் அனகை மகாதேவன் கலந்து கொண்டு தேமுதிக கட்சி கொடியினை ஏற்றி வைத்து கேப்டன் திருவுருவ படத்திற்கு மாலை அணிவித்து மலர் தூவி புகழஞ்சலி செலுத்தினர் பின்னர். பொதுமக்களுக்கு அன்னதானம் வழங்கப்பட்டது.

இதில் மாநில மாவட்ட அனகாபுத்தூர் பகுதி வார்டு வட்ட கழக. மகளிர் அணியினர் கழக நிர்வாகிகள். பொதுமக்கள் ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

## 50% வரிபிரதமர் மோடிக்கு திருப்பூர் எம்.பி. கடிதம்

திருப்பூர், ஆக.28- அமெரிக்காவின் 50% வரி விதிப்பு தொடர்பாக பிரதமர் மோடிக்கு திருப்பூர் எம்.பி. சுப்பராயன் கடிதம் எழுதியுள்ளார். அதில்; அமெரிக்க வரி விதிப்பால் திருப்பூர் பின்னலாடை தொழில் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளது. அமெரிக்க வரி விதிப்பால் திருப்பூரில் ரூ.15,000 கோடி வருவாய் இழப்பு, 2 லட்சம் வேலையிழப்பு ஏற்படும். பின்னலாடை தொழிலை பாதுகாக்க நிதி தொகுப்பை அறிவிக்க வேண்டும். அனைத்து மூலப்பொருள்களுக்கான இறக்குமதி வரியை நிறுத்தி வைக்க வேண்டும். பருத்திக்கு அறிவித்த தற்காலிக இறக்குமதி வரி விலக்கை நிரந்தரமாக்க வேண்டும். ஏற்றுமதியாளர்களுக்கு இலவச மின்சாரம், போக்குவரத்து வசதிகளை வழங்க வேண்டும் என வலியுறுத்தியுள்ளார்.




## சென்னை நொளம்பூரில் 64 ஆயிரம் யோகா ஆசனங்களை செய்து குளோபல் புக் ஆப் யோகா ரெக்கார்ட்ஸில் புதிய உலகசாதனை படைத்துள்ளனர்

சென்னை, ஆக.28- சென்னை முகப்பேர் அருகே நொளம்பூரில் குளோபல் ஸ்கூல் ஆஃப் யோகா மற்றும் இந்திய யோகா அசோசியேசன் ஆகியவை இணைந்து மாபெரும் உலக சாதனை நிகழ்ச்சி நடைப்பெற்றது. இதில் 50 ஆயிரம் ஆசனங்களை இலக்காகக் கொண்டு உலக சாதனை முயற்சி தொடங்கிய நிலையில், பங்கேற்பாளர்களின் உற்சாக பங்களிப்பால் 64 ஆயிரத்து 347 ஆசனங்கள் வெற்றிகரமாக மாணவ, மாணவியர்கள் செய்து அசத்தி புதிய உலகச் சாதனை படைத்தனர்.

மேலும் தனிப்பிரிவில் யோகினி சாய் தர்ஷினி என்ற மாணவி 100 நாடுகளின் தேசியக் கொடிகளின் பெயர்களைச் சொல்லியதோடு, அந்தந்த நாடுகளில் யோகா பயிலும் மக்களின் சதவீதத்தையும் இணைத்து யோகா மூலம் வெளிப்படுத்தி உலக சாதனை படைத்தார். சாதனை படைத்த மாணவ, மாணவியர்களுக்கு குளோபல் புக் ஆப் யோகா ரெக்கார்ட்ஸ் நிறுவனர் கணேஷ்குமார் வழங்கி கவுரவித்தார். உலக சாதனையை தொடர்ந்து 12வது ஆண்டு யோகா திருவிழாவை யொட்டி தேசிய அளவிலான யோகா சாம்பியன்ஷிப் போட்டியும் நடைபெற்றது. போட்டியில் பொது, பின்தளை, முன்தளை, கை சமநிலை, கால் சமநிலை, முறுக்கு, தலைகீழ், ரித்மிக்/கலைநடை 12 யோகா ஆசனங்கள் சாம்பியன் சுற்று என 9 பிரிவுகள் இடம்பெற்றன. ஒவ்வொரு பிரிவிலும் முதலிடம் முதல் ஐந்தாம் இடம் வரை வெற்றி பெற்றவர்களுக்கு கோப்பைகளும் சான்றிதழ்களும் வழங்கப்பட்டன.

இந்த நிகழ்ச்சியில் ஏராளமான மாணவர்கள், பெற்றோர்கள் கலந்து கொண்டனர்.

## சென்னை: வாக்காளர் பட்டியல் புகார் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன? அறிக்கை கோரி மனு

சென்னை, ஆக.28- வாக்காளர் பட்டியலில் மோசடி நடந்திருப்பதாக எழுந்த புகாரில் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள், விசாரணை குறித்த முழு விவரங்களை அறிக்கையாக தாக்கல் செய்ய இந்திய தேர்தல் ஆணையத்திற்கு உத்தரவிடக் கோரி சென்னை உயர் நீதிமன்றத்தில் பொது நல வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

கடந்த 2024ம் ஆண்டு நடைபெற்ற 17வது மக்களவைத் தேர்தலில், வாக்காளர் பட்டியலில் போலி வாக்காளர்கள், ஒரே முகவரியில் அதிக எண்ணிக்கையில் வாக்காளர்கள் என மிகப்பெரிய மோசடி நடந்துள்ளதாக எதிர்க்கட்சி தலைவர் ராகுல் காந்தி குற்றம்சாட்டி இருந்தார்.

இந்த குற்றச்சாட்டிற்கு இந்திய தேர்தல் ஆணையம் உரிய விளக்கம் அளிக்காமல், ராகுல் காந்தியை மிரட்டும் வகையில் நோட்டீஸ் அனுப்புவது ஜனநாயக அமைப்புகளை பலவீனப்படுத்தும் என்பதால் இந்த விவகாரத்தில் நீதிமன்றம் தலையிட்டு தீர்வு காண வேண்டும் எனக் கோரி கோடம்பாக்கத்தை சேர்ந்த வழக்கறிஞர் வெங்கட சிவகுமார் சென்னை உயர் நீதிமன்றத்தில் பொதுநல வழக்கு தாக்கல் செய்திருக்கிறார். அந்த மனுவில், அனைத்து தொகுதிகளுக்குமான வாக்காளர் பட்டியல் தரவுகளை, பொதுமக்கள் பார்வைக்கு இணையத்தில் pdf வடிவில் வெளியிட உத்தரவிட வேண்டும் என்றும் வாக்காளர் பட்டியல் மோசடி புகார்கள் தொடர்பாக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள், விசாரணைகள் குறித்த முழுமையான அறிக்கையை தாக்கல் செய்ய இந்திய தேர்தல் ஆணையத்திற்கு உத்தரவிடக் கோரியிருந்தார். இந்த பொது நல வழக்கு விரைவில் தலைமை நீதிபதி அமர்வில் விசாரணைக்கு வரும் என எதிர்ப்பார்க்கப்படுகிறது.




# ரூ.500 கோடி வசூலை எட்டியது 'கூலி'

உலகளாவிய வசூலில் 500 கோடி ரூபாயை எட்டியிருக்கிறது 'கூலி' திரைப்படம்.

ரஜினி - லோகேஷ் கனகராஜ் கூட்டணியில் ஆகஸ்ட் 14ம் தேதி வெளியான படம் 'கூலி'. சன் பிக்சர்ஸ் தயாரிப்பில் பெரும் எதிர்பார்ப்புடன் வெளியானது. கலவையான விமர்சனங்களால் இப்படத்தின் 2ம் நாள் வசூலே இறக்கம் கண்டு ஆச்சரியம் அளித்தது. இதனால் எதிர்பார்த்த வசூல் கிடைக்காமல் தடுமாறத் தொடங்கியது.

தற்போது இப்படம் உலகளாவிய வசூலில் 500 கோடி ரூபாயை எட்டியிருக்கிறது. 1000 கோடி ரூபாய் வரை வசூல் செய்யும் என்று படக்குழுவினர் எதிர்பார்த்தார்கள். ஆனால், 600 கோடி ரூபாயை எட்டுவதே கடினம் என்ற சூழல் தான் தற்போது நிலவுகிறது. தமிழகத்தில் 'கூலி' திரைப்படம் இறுதி பங்குத் தொகையாக ரூ.70 கோடி அளவுக்கே இருக்கும் என்று வர்த்தக நிபுணர்கள் கூறுகிறார்கள்.

மேலும், தமிழகம் தவிர்த்து இதர மாநிலங்களிலும் வசூல் எதிர்பார்த்த அளவுக்கு இல்லை. அனைத்து வெளிநாட்டு உரிமைகள் விற்பனையிலும் கண்டிப்பாக இப்படம் நஷ்டத்தைக் கொடுக்கும் என்பது உறுதி. ஏனென்றால் ரஜினி ஸ்ரீ லோகேஷ் கனகராஜ் கூட்டணி என்பதால் விநியோகஸ்தர்கள் பெரும் விலைக் கொடுத்து வாங்கினார்கள்.



# கர்ப்பத்தை அறிவித்த பரினீதி சோப்ரா

பாலிவுட்டில் நடிகையாகவும், பாடகியாகவும் புகழ்பெற்று விளங்கும் பரினீதி சோப்ரா (வயது 36), கடந்த 2011ல் 'லேடீஸ் வெர்சஸ் ரிக்கி பாஹ்ல்' என்ற இந்தி படத்தில் ஹீரோயினாக அறிமுகமானார். 'இஷாக்சாதே' என்ற தனது இரண்டாவது படத்திலேயே தேசிய விருது பெற்ற அவர், நிறைய வெற்றிப் படங்களை வழங்கியுள்ளார். அவரும், ஆம் ஆத்மி கட்சி எம்.பி ராகவ் சத்தாவும் தீவிரமாக காதலித்தனர். பிறகு 2023ல் அவர்களின் திருமணம் நடந்தது. இந்நிலையில், தான் கர்ப்பமாக இருக்கும் மகிழ்ச்சியான தகவலை பரினீதி சோப்ரா பதிவிட்டுள்ளார்.

இதுகுறித்து அவர் கூறுகையில், 'எங்களின் சிறிய பிரபஞ்சம் ஒன்று வந்து கொண்டிருக்கிறது. அளவற்ற ஆசிர்வாதத்தில் நாங்கள் மகிழ்ந்திருக்கிறோம்' என்றார். அவருக்கு திரையுலகம் மற்றும் அரசியல் பிரமுகர்கள் வாழ்த்து தெரிவித்துள்ளனர்.

# நவம்பரில் பிரபுதேவா - வடிவேலு படத்தின் படப்பிடிப்பு தொடக்கம்




பிரபுதேவா - வடிவேலு இணையும் படத்தின் பணிகள் படப்பூஜையுடன் தொடங்கப்பட்டுள்ளது.

25 ஆண்டுகளுக்குப் பிறகு பிரபுதேவா - வடிவேலு இருவரும் இணைந்து புதிய படமொன்றில் நடிக்கவுள்ளார்கள். இதனை சாம் ரோட்ரிக்ஸ் இயக்கவுள்ளார். கண்ணன் ரவி தயாரிக்கும் இப்படத்தின் பூஜை கோலகலமாக நடைபெற்றது. இதில் லைகா நிறுவன தயாரிப்பாளர் சுபாஸ்கரன், நடிகர் ஜீவா, ஸ்டுடியோ க்ரீன் ஞானவேல் ராஜா, இயக்குநர் நித்திஷ் சகாதேவ் உள்ளிட்ட பலர் கலந்துக் கொண்டு படக்குழுவினருக்கு வாழ்த்து தெரிவித்தார்கள்.

தமிழ் திரையுலகில் மறக்க முடியாத காமெடி கூட்டணிகளில் ஒன்று பிரபுதேவா - வடிவேலு கூட்டணி. இவர்கள் இணைந்த காமெடி காட்சிகள் இப்போதும் மக்களால் கொண்டாடப்பட்டு வருகிறது. இக்கூட்டணி இணைந்துள்ள இப்படத்துக்கு யுவன் இசையமைக்கவுள்ளார். முழுக்க காமெடி கலந்த ஆக்ஷன்படமாக இதன் கதையினை உருவாக்கி இருக்கிறார் இயக்குநர் சாம் ரோட்ரிகஸ்.

நவம்பர் மாதம் தொடங்கவுள்ள இப்படத்தில் பப்லு முக்கிய கதாபாத்திரத்தில் நடிக்கவுள்ளார். மேலும், ஒளிப்பதிவாளராக விக்னேஷ் வாசு, சண்டைக் காட்சிகளின் இயக்குநராக பீட்டர் ஹெய்ன், எடிட்டராக ஆண்டனி ஆகியோர் பணிபுரியவுள்ளனர். ஒரே கட்டமாக ஒட்டுமொத்த படப்பிடிப்பையும் முடிக்கும் வகையில் படப்பிடிப்பு திட்டமிடப்பட்டு வருகிறது.



# சிவகார்த்திகேயனுக்கு ஐஸ் வைத்த ருக்மணி

கன்னடம், இந்தி, தெலுங்கு ஆகிய மொழிகளில் நடித்துவிட்டு தமிழுக்கு வந்த ருக்மணி வசந்த், விஜய் சேதுபதியுடன் 'ஏஸ்' என்ற படத்தில் நடித்தார். தற்போது சிவகார்த்திகேயன் ஜோடியாக 'மதராஸி' என்ற படத்தில் நடித்துள்ளார். கைவசம் தெலுங்கில் 'டிராகன்', பான் இந்தியா மொழிகள் மற்றும் ஆங்கிலத்தில் 'தி டாக்ஸிக்', பான் இந்தியா மொழிகளில் 'காந்தாரா: சாஃப்டர் 1' ஆகிய படங்களை வைத்திருக்கிறார். இந்நிலையில் 'மதராஸி' படத்தின் இசை வெளியீட்டு விழாவில் பேசிய ருக்மணி வசந்த், 'இது அனைவருக்கும் பிடிக்கும் ஸ்பெஷலான படமாக இருக்கும். என் மனதுக்கு மிகவும் நெருக்கமான படம் என்றும் சொல்லலாம்.

மாலதி என்ற கேரக்டரை, என்மீது நம்பிக்கை வைத்து கொடுத்த இயக்குனர் ஏ.ஆர்.முருகதாசுக்கு நன்றி. ஒரு படத்தை உருவாக்க தொடர்ந்து அவர் அளிக்கும் உழைப்பு ஆச்சரியமாக இருக்கிறது. நான் சிவகார்த்திகேயனின் அங்கீகரிக்கப்பட்ட ஃபேன் கேர்ள். எனக்கு ஆதரவு அளித்து வரும் தமிழ் ரசிகர்களுக்கு நன்றி. எனது தொடக்க காலத்திலேயே அளவற்ற அன்பை வாரி வழங்கினீர்கள். தொடர்ந்து இதே ஆதரவை வழங்குவீர்கள் என்று நம்புகிறேன்' என்று ஐஸ் வைத்தார்.

# இந்திய அணிக்கு கோலி, ரோஹித் போல பங்களிப்பு வழங்கியவர் புஜாரா: அஸ்வின் புகழாரம்



இந்திய கிரிக்கெட் அணிக்கு கோலி மற்றும் ரோஹித் போலவே சிறந்த பங்களிப்பை புஜாரா வழங்கியுள்ள போதும் லைம்லைட்டுக்குள் அவர் வரவில்லை என இந்திய கிரிக்கெட் அணியின் முன்னாள் ஆல்ரவுண்டர் அஸ்வின் கூறியுள்ளார்.

அண்மையில் அனைத்து வடிவிலான கிரிக்கெட்டில் இருந்தும் ஓய்வு பெறுவதாக புஜாரா அறிவித்தார். இந்திய அணிக்காக 103 டெஸ்ட் போட்டிகளில் விளையாடி 7,195 ரன்களை புஜாரா குவித்துள்ளார். அக்மார்க் டெஸ்ட் கிரிக்கெட் வீரர் என அவரது ஆட்டத்தை ரசிகர்கள் போற்றுவது உண்டு. தடுப்பாட்டத்தில் கைதேர்ந்தவர்.

"இந்திய அணிக்கு புஜாரா அளித்த பங்களிப்பு கோலி மற்றும் ரோஹித்துக்கு இணையானது. அவர்களது பங்களிப்பு குறித்து பரவலாக பேசப்படுவது உண்டு. அனைத்து கிரிக்கெட் வீரர்களுக்கும் அந்த அளவுக்கு கவனம் கிடைப்பதில்லை. அதனால் அவர்கள் அணிக்கு அளித்த பங்களிப்பு குறைவு என சொல்லிவிட முடியாது.

மூன்றாவது பேட்ஸ்மேனாக அவர் களம் கண்டு விராட் கோலி அதிக ரன்கள் எடுக்க ஒரு கருவியாக உதவி உள்ளார். நீங்கள் நம்பினாலும், நம்பாமல் போனாலும் இதுதான் நிஜம்.

கிரிக்கெட்டை நேசிக்கும் மக்களுக்கு புஜாரா ஆட்டம் குறித்து தெரியும். 'கேம் ஆஃப் த்ரோன்ஸ்' பார்த்தவர்களுக்கு அதில் வரும் 'வொய்ட் வாக்கர்' பாத்திரம் குறித்து தெரியும். நான் புஜாராவை 'வொய்ட் வாக்கர்' என சொல்கிறேன். அவர் நிதானமாக நடந்தாலும் ஒருபோதும் களத்தை விட்டு வெளியேறுவதில்லை" என அஸ்வின் தனது யூடியூப் சேனலில் கூறியுள்ளார்.

# ஓப்பனராக 42 பந்துகளில் சதம் விளாசிய சஞ்சு சாம்சன்: கேரளா கிரிக்கெட் லீக்



கேரள கிரிக்கெட் லீக் தொடரில் தொடக்க ஆட்டக்காரராக களம் கண்டு 42 பந்துகளில் சதம் விளாசி அசத்தியுள்ளார் இந்திய கிரிக்கெட் அணியின் விக்கெட் கீப்பர் பேட்ஸ்மேனான சஞ்சு சாம்சன்.

இந்த தொடரின் 8வது லீக் ஆட்டத்தில் கொல்லம் அணிக்கு எதிராக 237 ரன்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்கை சஞ்சு சாம்சன் இடம்பிடித்துள்ள கொச்சி ப்ளூ டைகர்ஸ் அணி விரட்டியது. அவரது அபார சதம் அந்த அணியின் வெற்றிக்கு உதவியது. 20 ஓவர்களில் 6 விக்கெட்கள் இழப்புக்கு 237 ரன்கள் எடுத்தது கொச்சி அணி.

இந்த ஆட்டத்தில் 51 பந்துகளில் 121 ரன்களை விளாசி இருந்தார் சஞ்சு சாம்சன். அவரது இன்னிங்ஸில் 14 பவுண்டரி மற்றும் 7 சிக்ஸர்கள் அடங்கும். இதற்கு முந்தைய இன்னிங்ஸில் 6வது பேட்ஸ்மேனாக விளையாடி, 13 பந்துகளில் 22 ரன்களை அவர் எடுத்திருந்தார். இது ஆசிய கோப்பை தொடருக்கான பயிற்சியாக அவருக்கு அமைந்துள்ளது.

எதிர்வரும் ஆசிய கோப்பை தொடரில் சஞ்சு சாம்சன் தொடக்க ஆட்டக்காரராக களம் காண்பாரா என்ற எதிர்பார்ப்பு நிலவி வருகிறது. ஏனெனில், இம்முறை டி20 அணியில் ஷுப்மன் கில் இடம்பெற்றுள்ளார். அதனால் இருவரில் யார் தொடக்க ஆட்டக்காரர் என்ற விவாதம் இப்போது எழுந்துள்ளது. மற்றொரு தொடக்க ஆட்டக்காரராக இடது கை பேட்ஸ்மேன் அபிஷேக் சர்மா ஆடுவது உறுதி.

கடந்த 2024 அக்டோபர் மாதம் முதல் இந்திய அணிக்காக டி20 கிரிக்கெட்டில் தொடக்க ஆட்டக்காரராக சஞ்சு சாம்சன் விளையாடி வருகிறார். அப்போது முதல் 12 இன்னிங்ஸில் ஆடியுள்ள அவர் 3 சதங்களை விளாசியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.



# ஆசிய துப்பாக்கிச்சுடுதல்: ஐஸ்வரி பிரதாபுக்கு தங்கம்

கஜகஸ்தானின் ஷிம்கென்ட் நகரில் ஆசிய துப்பாக்கி சுடுதல் சாம்பியன்ஷிப் நடைபெற்று வருகிறது. இதில் மகளிருக்கான டிராப் பிரிவில் இந்தியாவின் நீரு தண்டா இறுதிப் போட்டியில் 43 புள்ளிகள் குவித்து தங்கப் பதக்கம் வென்றார். கத்தாரின் பாஸில் ரே 37 புள்ளிகளுடன் வெள்ளிப் பதக்கமும், இந்தியாவின் ஆஷிமா அஹ்லாவத் 29 புள்ளிகளுடன் வெண்கலப் பதக்கமும் வென்றனர்.

மகளிருக்கான டிராப் அணிகள் பிரிவில் நீரு தண்டா, ஆஷிமா அஹ்லாவத், பிரீத்தி ரஜக் ஆகியோரை உள்ளடக்கிய இந்திய அணி இறுதிப் போட்டியில் 319 புள்ளிகளை குவித்து தங்கப் பதக்கம் வென்றது. ஆடவருக்கான டிராப் இறுதிப் போட்டியில் இந்தியாவின் பவுனீஷ் மெந்திராட்டா 45 புள்ளிகள் பெற்று வெள்ளிப் பதக்கம் வென்றார். மகளிருக்கான 25 மீட்டர் பிஸ்டல் அணிகள் பிரிவில் மனு பாகர், இஷா, சிம்ரன்பிரீத் கவுர் ஆகியோரை உள்ளடக்கிய இந்திய அணி 1,749 புள்ளிகள் சேர்த்து வெண்கலப் பதக்கம் கைப்பற்றியது.

மகளிர் ஜூனியருக்கான 25 மீட்டர் பிஸ்டல் பிரிவு இறுதிப் போட்டியில் இந்தியாவின் பாயல் காத்ரி 36 புள்ளிகளை குவித்து தங்கப் பதக்கமும், நம்யா கபூர் 30 புள்ளிகளுடன் வெள்ளிப் பதக்கமும், தேஜஸ்வினி 27 புள்ளிகளுடன் வெண்கலப் பதக்கமும் வென்றனர். இந்த 3 பேரும் அணிகள் பிரிவில் 1,700 புள்ளிகளை குவித்து வெள்ளிப் பதக்கம் வென்றனர்.

# பணக் கஷ்டத்தை நினைத்து நம் கனவுகளை கைவிடக்கூடாது: ஆகாஷ் தீப் மனம் திறப்பு



இங்கிலாந்துக்கு எதிரான டெஸ்ட் தொடரில் அசத்திய ஆகாஷ் தீப் அந்தத் தொடர், தன் வாழ்க்கை தனக்கு ஏற்படுத்திய சவால்கள் என்று மனம் திறந்து பேசியுள்ளார்."எப்படி நான் 5 டெஸ்ட் போட்டிகளுக்குத் தாங்கினேன்?" என்ற கேள்வியும் ஆச்சரியமும் அவரை விட்டு இன்னும் அகலவில்லை போல் தெரிகிறது. கிரிக்கெட் இணையதளம் ஒன்றிற்கு அவர் அளித்துள்ள பேட்டியில் கூறியிருப்பதாவது: "ஐந்து டெஸ்ட் போட்டிகள் மிகமிகக் கடினம். அதுவும் ஒரு வேகப்பந்து வீச்சாளருக்கு ரொம்பவும் கடினம். குறிப்பாக நான் தொடருக்காக தயாரித்துக் கொள்ள வேண்டிய நேரத்தில் தான் ஏகப்பட்ட சவால்களை எதிர்கொண்டேன். மருத்துவமனையில் இருப்பதும் வெளியே வருவதுமான இருப்பு நம்முடைய உணவுக்கட்டுப்பாடு, தூக்கம் பெரிய இடையூறுக்குள்ளாகும். என் சகோதரியின் சிகிச்சை காரணமாக ஐபிஎல் தொடரின் போது கூட என் பயிற்சி சரியாக அமையவில்லை, நான் உண்மையில் 5 டெஸ்ட் போட்டிகள் கொண்ட தொடரை எப்படி தாங்கி மீண்டு வந்தேன்? ஆச்சரியம்தான். இந்தியா ஏ தொடருக்குத்தான் நன்றி சொல்ல வேண்டும், அந்தத் தயாரிப்புதான் தொடரில் என்னைத் தக்கவைத்தது. அதில் 1015 நாட்கள் பயிற்சி எடுக்க முடிந்தது. அந்த காலக்கட்டத்தை நன்றாகத் தயார்ப்படுத்திக் கொள்ள பயன்படுத்தினேன். நான் வளர்ந்து வரும் காலக்கட்டத்தில் இங்கு ஒன்றுமே இல்லை. மைதானம் கிடையாது, பயிற்சி வசதி கிடையாது. 1718 வயது வரை சிகப்பு நிற கிரிக்கெட் பந்தையே நான் பார்த்ததில்லை. எனவே தான் என்னிடம் பணம் மற்றும் பிற ஆதாரங்கள் வரும் போது நலிவுற்றோர் பிரிவில் இருந்து வரும் குழந்தைகளுக்கு உதவ வேண்டும் என்ற எண்ணம் பிறந்தது. எனவே அவர்கள் ரயிலில் நீண்ட தூரம் பயிற்சிக்காக செல்ல வேண்டியிருக்கக் கூடாது. நிதி ஆதாரம் வலுவாக இல்லை, பணக்கஷ்டம் என்பதால் நாம் நம் கிரிக்கெட் ஆட்டக் கனவுகளையோ, வரும் வாய்ப்புகளையோ கைவிடக்கூடாது. ஒரு அகாடமி ஆரம்பிக்க வேண்டும் என்ற என் கனவு நிறைவேறியதில் மகிழ்ச்சியடைகிறேன். நலிவுற்ற பின்னணியிலிருந்து வரும் திறமையுள்ள குழந்தைகளுக்கு சிறப்பு முன்னுரிமை அளிக்க வேண்டும் என்பதை வலியுறுத்தி வருகிறேன்." என்றார். வளரும் காலங்களில் மிகவும் கஷ்டப்பட்டார் ஆகாஷ் தீப். கொல்கத்தாவில் 150 சதுர அடி அறையில் 8 பேருடன் தங்கியிருந்தார். கிளப் கிரிக்கெட் ஆடும்போது லெமன் டீ தான் ஆகாரம். தந்தை, சகோதரர் இருவரையும் குறுகிய இடைவெளியில் இழக்க நேரிட்டது. ஆனாலும் கவலைப் படாமல் மன உறுதியுடன் இருக்கும் ஆகாஷ் தீப் அதை இப்படித்தான் கூறுகிறார்: "பிரச்சனைகளுக்கு இடையே சிறிய சந்தோஷம் கிடைத்தாலும் ஒரு புன்னகையை வரவழைக்க அதுபோதும்.." என்கிறார். அட்கின்சனுக்கு ஓவல் டெஸ்ட் 5ம் நாளில் கேட்ச் விட்டு அது சிக்ஸ் ஆனபோது இங்கிலாந்து வெற்றி இலக்கு 11 ரன்களாகக் குறைந்தது. இந்தத் தருணத்தில் அவருக்குக் கடும் பதற்றமே ஏற்பட்டது. "நான் சிக்சரைத் தடுக்கவாவது முயற்சி செய்து தட்டி விட்டிருக்கலாம். நான் கேட்சை எடுத்து விடலாம் என்று போனேன். அதிர்ஷ்டவசமாக அடுத்த ஓவர் அட்கின்சன் விக்கெட்டை வீழ்த்தி விட்டோம். கேட்ச் விட்டவுடன் கூட அதைப் பற்றி யோசிக்கக் கூட நேரமில்லை. கேட்ச் விட்டதனால் வேறு ஏதாவது நடந்திருந்தால் நான் ஒருவேளை அதையே யோசித்துக் கொண்டிருந்திருப்பேன். அதிர்ஷ்டவசமாக அவ்வாறு எதுவும் நடக்கவில்லை. சிராஜ் கடைசி விக்கெட்டை வீழ்த்தியவுடன் நான் வேகமாக அவரை நோக்கி ஓடினேன்." என்றார். பென் டக்கெட்டுடன் ஏற்பட்ட மோதல் குறித்துக் கூறும்போது, "என்னிடம் அவர் 45 முறை அவுட் ஆகியிருக்கிறார். அவர் என்னிடம் சொன்னார், இந்த முறை நீ என்னை அவுட் ஆக்க முடியாது என்றார். ஆனால் நான் அவரை வீழ்த்தினேன், அப்போது நான் அவரிடம் சொன்னேன், "புரோ.. போங்க போய் ரெஸ்ட் எடுங்க" என்றேன். " இவ்வாறு ஆகாஷ் தீப் கூறினார்.



# வேலூர் அரசமரப்பேட்டையில் 14ம் ஆண்டு விநாயகர் சதுர்த்தி திருவிழா

வேலூர், ஆக.28-

வேலூர் மாவட்டம், வேலூர், அரசமரப்பேட்டை, இன்ஜினியர் சுப்புராய முதலியார் தெருவில், 14 ஆம் ஆண்டு விநாயகர் சதுர்த்தி விழா சரண்ராஜ் மற்றும் விழா குழுவினர்கள் தலைமையில் நடைபெற்றது.

இதில் சிறப்பு அழைப்பாளர்களாக அதிமுக மாநகர மாவட்ட செயலாளர் எஸ்.ஆர் கே. அப்பு, பாஜக மாநில பொதுச் செயலாளர் மகளிர் அணி கார்த்தியாயினி, மாவட்ட செயலாளர் பாமக ஜெகன் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பு பூஜைகள் செய்து அன்னதானங்களை துவக்கி வைத்தனர். இதில் அரசப்மரபேட்டை இன்ஜினியர் சுப்புராய முதலியார் தெருவில் உள்ள விழா குழுவினர்கள் கார்த்தி, புருஷோத்தமன், கணேஷ், யுவராஜ், கோபி, கபீல், சுதர்சன், பாலகிருஷ்ணன், பிரபு, கார்த்திக், கிருஷ்ண பிரசாந்த், கார்த்திகேயன், சசிதரன், கோகுல், கோகுலகிருஷ்ணன், அரவிந்தன், சஞ்சய், முகேஷ் மற்றும் விழா குழுவினர்கள் நிர்வாகிகள் பொதுமக்கள் என பலர் கலந்து கொண்டு விநாயகர் சதுர்த்தி திருவிழாவை சிறப்பித்தனர்.





# வேலூரில் தமிழ்நாட்டின் முதல் சோகமாக ஆண்களுக்கான வேட்டி சட்டைகளின் பிரபல பிரம்மாண்டமான உதயம் காட்டன் ஷோரூம் திறப்பு விழா

வேலூர், ஆக.28-

வேலூர் மாவட்டம், வேலூர் சிஎம்சி அவுட் கேட் அருகே, தமிழ் நாட்டில் முதன் முதலாக ஆண்களுக்கான வேட்டி சட்டைகளின் பிரபல பிரம்மாண்டமான முதல் ஷோ ரூம் திறப்பு விழா, உதயம் காட்டன் உரிமையாளர் பி.ஆர். அருண்ஈஸ்வர் தலைமையில் நடைபெற்றது. இதில் சிறப்பு அழைப்பாளராக விஐடி பல்கலைக்கழக துணைவந்தர் ஜிவி செல்வம் ரிப்பன் வெட்டி திறந்து வைத்தனர். ஜி.வி.எம்.சி. ஹெச். மருத்துவமனை டாக்டர். ஜி.வி.டி. விஜய கோவிந்தராஜன் முதல் விற்பனையை துவக்கி வைத்ததைத் தொடர்ந்து டி.ஆர்.எம். குழுமத்தைச் சேர்ந்த எம்.பழனி பெற்றுக் கொண்டார். இந்த ஷோரூம் தமிழ்நாட்டில் முதன்முதலாக வேலூரில் தொடங்கப்பட்டதாகவும் நவீன டிசைன்களில் ஆடை ரகங்கள், அனைத்து வகையான பருத்தி வேட்டி சட்டைகள், திருமணப்பட்டி வேட்டிகள் மற்றும் சட்டைகள் குர்தா மற்றும் பைஜாமா ஒட்டிக்கோ கட்டிக்கோ வேட்டிகள் மற்றும் சட்டைகள் ரெடிமேட் பாக்கெட் வெட்டிகள் உள்ளிட்ட ஆண்களுக்கு தேவையான அனைத்து வகையான ஆடைகளை ஷோரூம் இல் வைத்து மிகுந்த பாரம்பரியமிக்க நகரமான வேலூரில் நமது கலாச்சாரம் வேரூன்றி உள்ளது எனவும் காலத்தால் அழியாத கிளாசிக் மற்றும் நவீன கால ஆடைகள் என அனைத்து பாரம்பரிய ஆடைகளும் இங்கு ஒரே இடத்தில் கிடைக்கும் படி உதயம் காட்டன் புதுமையுடன் பாரம் பரியத்தை பரப்பும் பயணத்தில் மற்றொரு மயில்களை குறித்து இந்த ஷோரூம் திறக்கப்பட்டுள்ளது என குறிப்பிட்டுள்ளனர்.



# வேலூர் மாவட்டத்தில் நகர்ப்புற பகுதிகளில் உள்ள அரசு உதவி பெறும் பள்ளிகளில், மாவட்ட ஆட்சியர் தலையில் முதலமைச்சரின் காலை உணவு திட்ட துவக்க விழா

வேலூர், ஆக.28-

வேலூர் மாவட்டம், வேலூர் தாலூகா, வேலூர் மாநகராட்சி, வேலூர் மாவட்டத்தில் நகர்ப்புற பகுதிகளில் உள்ள அரசு உதவி பெறும் பள்ளிகளில் முதலமைச்சரின் காலை உணவு திட்டத்தை வேலூர் செயிண்ட் மேரிஸ் தொடக்கப் பள்ளியில், மாவட்ட ஆட்சியர் சுப்புலெட்சுமி, (26.08.2025) தொடங்கி வைத்தார். இந்நிகழ்ச்சியில் வேலூர் சட்டமன்ற உறுப்பினர் கார்த்திகேயன், வேலூர் மாநகராட்சி மேயர் சுஜாதா, வேலூர் மாநகராட்சி ஆணையர் இலட்சுமணன், வேலூர் வருவாய் கோட்டாட்சியர் செந்தில்குமார், வட்டாட்சியர் வடிவேல், மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் தயாளன், மாமன்ற உறுப்பினர்கள் தவமணி, தபசும் பர்வின், உதவி ஆணையர் சதகதுல்லா, மாநகர நல அலுவலர் மரு.பிரதாப்குமார், புனித மரியம்மை அரசு நிதி உதவி தொடக்கப்பள்ளி, தாளாளர் அருட்சகோதரி ஷிகூீ. அமலி, தலைமை ஆசிரியர் அருட்கோதரி ஷிகூீ. லூர்துமேரி, துறை சார்ந்த அலுவலர்கள் பணியாளர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர். தமிழக முதல்வரின் காலை உணவு திட்ட காணொளி காட்சியை தொடர்ந்து மாவட்ட ஆட்சியர் மாணவர்களுக்கு காலை உணவு பரிமாறி பள்ளி மாணவர்களுடன் அமர்ந்து காலை உணவு உட்கொண்டனர்.

# “ஹைதராபாத் அறிவியல் மையம் சுற்றுப்பயணம் மேற்கொள்ளும்“ மாநகராட்சி பள்ளி மாணவ, மாணவிகளை மேயர் இந்திராணி பொன்வசந்த் வாழ்த்தி வழியனுப்பி வைத்தார்கள்

மதுரை, ஆக.28-


மதுரை மாநகராட்சி அறிஞர் அண்ணா மாளிகையில் மாநகராட்சியில் பயிலும் 10 மாணவ. மாணவிகள் ஹைதராபாத் அறிவியல் மையத்திற்கு காண்பதற்கு சுற்றுப்பயணம் மேற்கொள்ளும் மாணவ, மாணவிகளை மாண்புமிகு மேயர் திருமதி.இந்திராணி பொன்வசந்த் அவர்கள், ஆணையாளர் திருமதி. சித்ரா விஜயன், இ.ஆ.ப, அவர்கள் ஆகியோர் வாழ்த்தி இன்று (27.08.2025) வழியனுப்பி வைத்தார்கள்.



மதுரை மாநகராட்சியின் கட்டுப்பாட்டில் 26 ஆரம்பபள்ளிகள், 14 நடுநிலைப்பள்ளிகள், 9 உயர்நிலைப்பள்ளிகள் மற்றும் 15 மேல்நிலைப் பள்ளிகள் செயல்பட்டு வருகிறது. இப்பள்ளிகளில் பயிலும் மாணவ, மாணவியர்களின் அறிவியல் ஆர்வத்தை ஊக்குவிக்கும் வகையில் சிறந்த 10 மாணவ, மாணவிகள் தேர்வு செய்யப்பட்டு ஹைதாரபாத்தில் உள்ள அறிவியல் மையத்திற்கு காண்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

அதன்படி மாடக்குளம் மாநகராட்சி நடுநிலைப்பள்ளி 8 ஆம் வகுப்பு மாணவன் இஸ்மாயில் பாரித், வில்லாபுரம் மாநகராட்சி நடுநிலைப்பள்ளி 8 ஆம் வகுப்பு மாணவன் சந்தோஷ், 8 ஆம் வகுப்பு மாணவி பாலசிவசக்தி, காக்கை பாடினியார் பெண்கள் மேல்நிலைப்பள்ளி 9 ஆம் வகுப்பு மாணவி ரிஷ்சிதா, மாசாத்தியார் பெண்கள் மேல்நிலைப்பள்ளி 8 ஆம் வகுப்பு மாணவி அஞ்சனா, வெள்ளிவீதியார் பெண்கள் மேல்நிலைப்பள்ளி 7 ஆம் வகுப்பு மாணவி தனுஜா, 8 ஆம் வகுப்பு மாணவி காவியாஞ்சலி, சுந்தரராஜபுரம் மாநகராட்சி மேல்நிலைப்பள்ளி 7 ஆம் வகுப்பு மாணவி குயின் பிரின்சி, திரு.வி.கா மாநகராட்சி மேல்நிலைப்பள்ளி 9 ஆம் வகுப்பு மாணவன் கோசல்ராம். 8 ஆம் வகுப்பு மாணவன் சக்தி என மொத்தம் 4 மாணவர்கள், 6 மாணவிகள் என மொத்தம் 10 மாணவ, மாணவிகளும் மற்றும் மாசாத்தியார் பெண்கள் மேல்நி லைப்பள்ளிரேவதி கிருஷ்ணசாமி தலைமை ஆசிரியர் வில்லாபுரம் மாநகராட்சி பள்ளிதிரு. கமலகண்ணன் முருகன் பட்டதாரி ஆசிரியர், வெள்ளிவீதியார் பெண்கள் மேல்நிலைப்பள்ளி திருமதிமல்லிகா முதுகலை பட்டதாரி ஆசிரியர் என 3 ஆசிரியர்களும் உடன் செல்கிறார்கள். ஹைதராபாத் அறிவியல் மையத்தை காண்பதற்கு செல்லும் மாணவ, மாணவிகளை மாண்புமிகு மேயர் வாழ்த்தி வழியனுப்பி வைத்தார்கள். அறிவியல் மையத்தை காண்பதற்கு சுற்றுப்பயணம் மேற்கொள்ளும் மாணவ, மாணவிகளை மதுரை இரயில் நிலையத்தில் மாநகராட்சி ஆணையாளர் திருமதி.சித்ரா விஜயன், இ.ஆ.ப. அவர்கள் நேரில் சந்தித்து வாழ்த்தி வழியனுப்பி வைத்தார்கள்.

இந்நிகழ்வில் கல்வி அலுவலர் திரு.ஜெய்சங்கர், ஆசிரியர்கள், கல்விப்பிரிவு அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள், மாணவ, மாணவிகள், உட்பட பலர் கலந்து கொண்டனர்.



## வேலூர் தொரப்பாடி பிள்ளையார் கோயில் தெருவில்

# விநாயகர் சதுர்த்தி முன்னிட்டு ஸ்ரீ சித்தி விநாயகர் திருக்கோயில் திருவிழா

## இந்து சமய அறநிலைத்துறை அலுவலர்கள் மற்றும் உறுப்பினர்கள் பங்கேற்பு

வேலூர், ஆக.28-

வேலூர் மாவட்டம், வேலூர் தாலுகா, தொரப்பாடி பிள்ளையார்கோயில் தெருவில், விநாயகர் சதுர்த்தி முன்னிட்டு அருள்மிகு ஸ்ரீ சித்தி விநாயகர் திருக்கோயிலில் தேர் திருவிழா இந்து சமய அறநிலைத்துறை அலுவலர்கள் அறங்காவலர் குழு மற்றும் ஊர் பொதுமக்கள் தலைமையில் நடைபெற்றது. இதில் சிறப்பு அழைப்பாளர்களாக வேலூர் எம்எல்ஏ கார்த்திகேயன், மேயர் சுஜாதா ஆனந்த்குமார், மாவட்ட அறங்காவலர் குழு தலைவர் நா.அசோகன், 49ம் வட்ட திமுக செயலாளரும், தொரப்பாடி அறநிலை துறை அறங்காவலர் குழு தலைவருமான அப்பு (எ) எஸ்.தனசேகர் ஆகியோர் கலந்துகொண்டு சிறப்பு பூஜைகள் செய்து, சிறப்பு அழைப்பாளர்களையும், விழா குழு நிர்வாகிகளையும் பொன்னாடை போர்த்தி மலர்மாலை அணிவித்து கௌரவித்து, அருள்மிகு ஸ்ரீ சித்தி விநாயகர் தேர் திருவீதிஉலாவை துவக்கி வைத்து சிறப்பித்தனர். இதில் விழா குழுவினர்கள் சக்திவேல், மணிவண்ணன், தயாளன், பாலாஜி, தண்டபாணி, சுனில்குமார், கார்த்தி, கணேஷ், நரேஷ், அபிஷேக் மற்றும் நிர்வாகிகள் ஊர் பொதுமக்கள் இளைஞர்கள், உள்ளூர் மற்றும் வெளியூர் பக்தர்கள் என பலர் கலந்து கொண்டு விநாயகர் சதுர்த்தி திருவிழாவை சிறப்பித்தனர்.



■ கன்னியாகுமரி மாவட்டம் நாகர்கோவில் மாநகராட்சியின் கிழக்கு மண்டலம், வடிவீஸ்வரம், மீனாட்சிபுரம் சாலையில் இன்று தடைசெய்யப்பட்ட புகையிலை மற்றும் ஒருமுறை பயன்படுத்தப்பட்ட பிளாஸ்டிக் சோதனையில் புகையிலை கட்டுப்பாட்டுப் படையின் தலைவர் டாக்டர் ஆல்பர் மதியரசு, ராஜா எஸ்.ஒ., சுகாதார மேற்பார்வையாளர் ஜெயன், அனிமேட்டர்கள் வீரபாகு, சிங்காரம், உமா மற்றும் ஓட்டுநர் பாலகிருஷ்ணன் ஆகியோர் கலந்து கொண்டனர். மொத்தம் 75 கடைகள் ஆய்வு செய்யப்பட்டன, இரண்டு கடைகள் தடைசெய்யப்பட்ட புகையிலை மற்றும் தடைசெய்யப்பட்ட பிளாஸ்டிக் பை இருந்த . ஒரு கடையில் 1.5 கிலோ புகையிலையும், ஐந்து கடைகளில் 25 கிலோ தடைசெய்யப்பட்ட பிளாஸ்டிக்கையும் பறிமுதல் செய்தன. பறிமுதல் செய்யப்பட்ட புகையிலை மேலும் தேவையான நடவடிக்கைகளுக்காக உணவுப் பாதுகாப்புத் துறையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது என தெரிவித்தனர்..



## தரம் உயர்த்தப்பட்ட மாநகராட்சி தண்ணீர் தட்டுப்பாடால் தவிக்கும் மக்கள்

# சேதமடைந்த குடிநீர் கிணற்றை சீரமைக்காத அதிகாரிகள்

நாகர்கோவில், ஆக .28-

கன்னியாகுமரி மாவட்டம் நாகர்கோவில் மாநகராட்சி 3 வது வார்டு மேலபெருவிளை ஆற்றங்கரை பகுதியில் வீட்டு குடிநீர் இணைப்புடன் இணைக்கப்பட்ட குடிநீர் கிணறு சில நாட்களுக்கு முன்பு அடிப்பகுதியில் உள்ள கற்கள் முழுவதும் பெயர்ந்து மண்ணுக்குள் புதைந்து மேல்பகுதி மட்டும் அந்தரத்தில் தொங்கிக்கொண்டு இருந்தது

இதனால் அப்பகுதி மக்கள் பீதி அடைந்து மாநகராட்சி அதிகாரிகளுக்கு தகவல் தெரிவித்தனர்.

அந்த பகுதியினை பார்வையிட்ட அதிகாரிகள் உள்ளே யாரும் செல்ல வேண்டாம் என பேரிகார்டு அமைக்கப்பட்டு பாதுகாப்பு ஏற்பாடு செய்தனர்.

பல நாட்கள் ஆகியும் இன்னும் அதனை சீரமைக்க எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என பொதுமக்கள் குற்றச்சாட்டு.

இதனால் அப்பகுதி மக்களுக்கு குடிநீர் தட்டுப்பாடு ஏற்பட்டு வருகிறது. மேலும் கிணற்றை சுற்றியுள்ள பகுதியும் மண்ணுக்குள் புதைந்து வருவதால் ஆபத்து அறியாமல் யாரும் உள்ளே சென்று அசம்பாவிதங்கள் ஏற்படவும் அதிக வாய்ப்புள்ளது.

எனவே உடனடியாக அதனை சீரமைத்து மீண்டும் குடிநீர் தட்டுப்பாடு இல்லாமல் வழங்கிடவும், உயிர் சேதம் தவிர்த்திடவும் பொதுமக்கள் கோரிக்கை.

தமிழக அரசு பொதுமக்களுக்கு அடிப்படை வசதிகள் வழங்க தொடர்ந்து வலியுறுத்தி வரும் நிலையில் அடிப்படை வசதிகளில் மிகவும் அத்தியாவசியம் குடிநீர் .

இதற்கான பணிகளில் ஏன் மாநகராட்சி இவ்வளவு அலட்சியமாக செயல்படுகிறது என பொதுமக்கள் கேள்வி?



# வேலூர் சார்பனாமேடு நண்பர்கள் சார்பில் ஸ்ரீ விநாயகர் சதுர்த்தி திருவிழா

வேலூர், ஆக.28-

வேலூர் மாவட்டம், வேலூர் தாலுகா, வேலூர் சார்பனாமேடு நண்பர்கள் சார்பில் ஸ்ரீ விநாயகர் சதுர்த்தி திருவிழா, உ. ராஜ்குமார் தலைமையில் கோலாகலமாக நடைபெற்றது. இவ்விழாவில் ஸ்ரீ முத்துமாரியம்மன் கோவில் டிரஸ்ட் கலாசிபாளையம் பத்மநாபண முதலியார், 38வது வட்ட திமுக செயலாளர் முரளி கிருஷ்ணன், 38 வது வார்டு மாமன்ற உறுப்பினர் திருப்பாவை தனபால் ஆகியோர் கலந்து கொண்டு குத்துவிளக்கேற்றி துவக்கி வைத்து சிறப்பித்தனர். இதில் சிறப்பு அழைப்பாளர்களாக வேலூர் மாவட்ட திமுக செயலாளரும் அணைக்கட்டு எம்.எல் .ஏ.வுமான நந்தகு மார், வேலூர் எம்.எல்.ஏ. கார்த்திகேயன், மேயர் சுஜாதா ஆனந்த்குமார், மாமன்ற உறுப்பினர் 2ம் மண்டல குழு தலைவர் வீனஸ் நரேந்திரன், வேலப்பாடி பகுதி திமுக செயலாளர் சத்யமூர்த்தி, சலவன்பேட்டை பகுதி திமுக செயலாளர் சுந்தர்விஜி, குருவாயூரப்பன் டிரஸ்ட் எல். சம்பத் முதலியார், மாவட்ட அறங்காவலர் குழு தலைவர் அசோகன், அதிமுக மாநகர செயலாளர் அப்புபால் அதிமுக வி.எம்.பாலாஜி ஆகியோர் கலந்துகொண்டு யாக பூஜையுடன் சிறப்பு பூஜைகள் செய்து அன்னதானத்தை துவக்கி வைத்து சிறப்பித்தனர். இந்நிகழ்ச்சியில் திரளான பக்தர்கள் பொதுமக்கள் மற்றும் தொழிலதிபர்கள், விழா குழுவினர்கள் ரவிக்குமார், பிரபு, நமச்சிவாயம், பாலாஜி, முத்துக்குமரன், செந்தில்குமார், பாலமுருகன், திவாகர், பிரவீன், தினேஷ்குமார் என பலர் கலந்து கொண்டு இந்த விநாயகர் சதுர்த்தி திருவிழாவை கோலாகலமாக சிறப்பித்தனர்.

Printed by A.PONRAJ, published ,owned by A.PONRAJ and printed at “SRI SAAI PRINTERS”No.122,Neethipathi, Rajasekaran Street,vaarasanthai road,Sivaganga and published at 6 a, madurai road Sivaganga, Sivaganga district,Editor A.PONRAJ. Ph: 8508502161